திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த எடக்கீழையூர், செருமங்கலம் உள்ளிட்ட பெரிய கிராமங்களில் கால்நடை மருத்துவமனைகள் இல்லாததால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றார்கள். கால்நடைகளின் சிகிச்சைக்காக தொலைவில் உள்ள மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். மக்களின் இந்தக் கோரிக்கையை ஏற்று அரசு புதிய கால்நடை மருத்துவமனைகளை அங்கே உருவாக்க முன்வந்தால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மருத்துவமனை கட்டுவதற்கான நிதியை அளிக்கத் தயாராக இருக்கிறேன் என்று நான் உறுதியளிக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோருகின்ற பகுதிகளிலே அரசின் விதிகளுக்கு உட்பட்டு அங்கே போதுமான அளவுக்கு கால்நடை அலகுகள் இருக்குமென்று சொன்னால், நிச்சயமாக அங்கே கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

71—

சொந்தக் கட்டடம்

***6449—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 மார்ச் 26]

கோவில்பட்டி வட்டம், கடம்பூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு கட்டடங்கள், பழுதடைந்த அரசு கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 52 சார் பதிவகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12—4—2012—ல் நிருவாக அனுமதியும், ஒரு சார் பதிவகத்திற்கு ரூ.50 இலட்சம் வீதம் ரூ.26 கோடி நிதி ஒப்பளிப்பும் செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு அரசு கட்டடம் கட்ட தெரிவு செய்யப்பட்ட 52 சார் பதிவகங்களின் பட்டியலில் பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், கடம்பூர் சார் பதிவாளர் அலுவலகமும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி'

என்ற குறளின் வழியில் வாரி வழங்கும் வள்ளலாகவும், எல்லோரிடத்திலும் பரிவு காட்டுபவராகவும், நடுநிலை தவறாமல் ஆட்சி செய்பவராகவும், குடிமக்களைப் பேணிக்காப்பவராகவும் விளங்கும் ஆட்சியாளரே, (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியாளர்களுக்கெல்லாம் தலைசிறந்த ஆட்சியாளர் என்ற புகழோடு விளங்குபவராவார் என்ற குறளின் அடிப்படையில், அப்புகழுக்குரிய இதய தெய்வம், தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, கடம்பூர் பேரூராட்சியில் புதிய சார் பதிவாளர் அலுவலகமும், கோவில்பட்டியில் ஒரு புதிய சார் பதிவாளர் அலுவலகமும் கட்டித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின்

அரசுக்கு தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளை பொற்பாதங்களில் காணிக்கையாக்கி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியில் 43 கிராமப் பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய மொரப்பூர் பகுதியில் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக வாடகைக் கட்டடத்தில் சார் பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான இடம் அங்கு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்குவார்களேயானால், உடனடியாக அப்பணிகளைத் துவங்குவதற்குத் துறையினர் முன் வருகிறார்கள். ஆகவே, இந்த ஆண்டிலாவது மொரப்பூரில் சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் இடம் இருப்பின் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு இதனை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழகத்தில் இருக்கின்ற தனியார் மற்றும் அரசுக் கட்டடங்களில் இயங்குகின்ற அத்தனை சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி 2011–2012 ஆம் ஆண்டு தனியார் கட்டடங்களில் செயல்பட்ட 33 அலுவலகங்களுக்கும், அரசுக் கட்டடங்களில் செயல்பட்ட 19 அலுவலகங்களுக்கும், 2012–2013–ல் தனியார் கட்டடங்களில் செயல்பட்ட 38 அலுவலகங்களுக்கும், அரசுக் கட்டடங்களில் செயல்பட்ட 10 அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.*

2013 மார்ச் 26]

முற்பகல் 10–50

அதேபோல, ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் தனியார் கட்டடங்களிலே 18 இடங்களிலும், அரசு இடங்களிலே 11 கட்டடங்களிலும் இருந்தவற்றிற்கு மொத்தம் 29 கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

72—

பேருந்து பணிமனை

***21030—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பகுதியில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், வேலூர் மண்டலத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், ஆம்பூர் மற்றும் கொணவட்டம்–2 ஆகிய பணிமனைகள்மூலம் ஆலங்காயத்திற்கு 6 பேருந்துகள் மட்டுமே முழுமையாகவும், 12 பேருந்துகளும் பல்வேறு இடங்களிலிருந்து குறுநடைகளாகவும் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம், தருமபுரி மண்டலம்மூலம் 4 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பேருந்துகளுக்காக ஆலங்காயத்தில் தனியாகப் பணிமனை அமைக்க தற்சமயம்